மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தேவகோட்டையில் வனத்துறைச் சரக அலுவலகம் 1-4-1981 முதல் முறைபடி செயல்பட்டு வருகிறது.

குமரி மாவட்டத்தில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம்

*வினா எண். 127—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் ஏதேனும் குமரி மாவட்டத்தில் ஆரம்பிக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) அவ்வாறென்றால் அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்பயிர் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கென சுமார் 200-300 ஏக்கர் நிலம் வேண்டி, அம் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கேட்டுள்ளது. நிலம் கிடைத்த பின் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், தமிழ்நாட்டில் மற்றப் பகுதிகளில் இல்லாத ரப்பர், கிராம்பு ஆகிய பிரத்தியேகப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன என்பதாலே, ரப்பர், கிராம்பு, நெல், தென்னை போன்ற பயிர்களுக்கு அதிகமான நோய்கள் ஏற்பட்டிருப்பதால் அந்த மாவட்டத்தில் அமைப்பதற்கு அரசு முடிவு செய்திருப்பதாக அந்த மக்கள் சார்பிலேயும், சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலேயும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் இப்படிப்பட்ட பிரத்யேகமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதன் காரணமாக விரைவிலே அந்த ரிசர்ச் சென்டரை அமைக்க அரசு நடவடிக்கையெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களேச் நிலத்தைக் கேட்டிருக்கிறோம், கிடைத்தவுடன் அமைக்கப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அரசுக்கு, சொந்தமான இடங்கள் பேச்சிப்பாறை அரசு வேளாண்மைத் துறைக்குச் சமீபத்திலே இருப்பதன் காரணமாக, அந்த வேளாண்மைத் துறைக்குச் சொந்தமாக இருக்கிற அன்னாசி பண்ணையை ஒட்டிய நிலத்தை ஆர்ஜிதம் செய்ய அரசால் முடியும் என்ற காரணத்தினாலே, அதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பதில் கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. மி. வின்செண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, பையனீர் குடும்பத்தாரிடமிருந்து உயர்நீதிமன்றத் தீர்ப்பின்படி வனத்துறை பெற்றுள்ள நிலத்தில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேளாண்மைப் பல்கலைக் கழகம் முயற்சி எடுத்துள்ளது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: முயற்சி எடுத்தது என்பது உண்மை. ஆனால் பயனீர் பண்ணையினர் 1971 ஆம் ஆண்டிலேயே அது சம்பந்தமாக விவரங்களை உச்ச நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்று விட்டார்கள். அது இன்னும் உச்ச நீதிமன்றத்திலேயே முடிவு செய்யப்படாமலிருக்கிறது. ஆகவேதான் வேறு நிலத்தைக் கேட்கிறோம்.

விரிஞ்சிபுரத்திலுள்ள வாழைப் பண்ணை

*வினா எண். 128—திரு. இலா. பலராமன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு விரிஞ்சிபுரம் வாழைப் பண்ணை அரசு ஏற்படுத்தியதா?

(ஆ) இதன் நோக்கம்?

(இ) இதனால் கன்றுகளை வாங்கிப் பயன் அடைந்த விவசாயிகள் எவ்வளவு பேர்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) வாழை ரகங்களின் உற்பத்தித்திறனைப் பெருக்கவும் நோய்ப் பூச்சிகளைக் கட்டுப்படுத்திடவும் ஆய்வுகள் மேற்கொள்ளவும் இப்பண்ணை ஏற்படுத்தப்பட்டது.

(இ) சுமார் ஒன்பதாயிரம் விவசாயிகள்.

திரு. என். வாதராஜன்: தலைவர் அவர்களே, புகழ்பெற்ற சிறுமலை வாழை போன்றவைகள் எல்லாம் முடிக்கொத்து நோயினால் பாதிக்கப்படுகிற இக்காலத்தில் இந்த வாழைக்கு மாற்று வாழைகள் கண்டு பிடிக்கக்கூடிய ஆராய்ச்சி இந்தப் பண்ணையில் நடைபெறுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாற்று வாழை கண்டு பிடிக்கின்ற முயற்சி இல்லை. இங்கே பயிரிடக்கூடிய பச்சை வாழை ரகங்களினுடைய உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையிலேயும் பச்சைவாழையினுடைய தரத்தை ஏற்றுமதிக்குத் தகுந்தவாறு உயர்த்துகின்ற வகையிலும் இங்கே ஆராய்ச்சி செய்யப்படுகிறது.